## உச்சநீதிமன்ற உத்தரவு உள்ளதால்

# காவிரி விவகாரத்தில் கர்நாடகாவிடம் நாம் கெஞ்சத் தேவையில்லை!

## தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் பேட்டி!

**வேலூர், ஜூலை 29-**

**சுப்ரீம் கோர்ட் ஆர்டர் உள்ளதால் காவிரி விவகாரத்தில் கர்நாடகாவிடம் நாம் கெஞ்ச தேவையில்லை என காட்பாடியில் தி.மு.கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் கூறினார்.**



காட்பாடி காந்தி நகரில் தி.மு.க., பொதுச்செயலாளரும், முன்னாள் நீர்வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவரிடம் நிருபர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதிலும் வருமாறு;

**கேள்வி:** காவிரி விவகாரம் தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் விஜய் கர்நாடகா சென்று அந்த மாநில முதல்வரிடம் பேச்சுவார்த்தை நடத்த இருப்பது குறித்து?.

**துரைமுருகன்:** காவிரியில் இரண்டு பிரச்சினை உள்ளது. ஒன்று மாதாந்திர வாரியாக நமக்கு கொடுக்க வேண்டிய தண்ணீரை கொடுக்கவில்லை. அதைக் கேட்கப் போகிறாரா அல்லது மேகதாது கட்ட வேணாம்னு பேச போறாரான்னு தெரியல. தண்ணீர் எங்களுக்கு பத்தவில்லை எனக்கேட்டால் சுப்ரீம் கோர்ட்டின் ஆர்டர் வீணாக போய்விடும்.

அதனால்தான் எங்க ஆட்சி காலத்தில கூட யாரும் போனதில்லை. ஏனென்றால் நமக்கு சுப்ரீம் கோர்ட் உரிமை கொடுத்து விட்டது. இவர்களிடம் போய் கெஞ்ச தேவை இல்லை. முதலமைச்சர் பெங்களூர் செல்வதற்கு முன்பு, எங்களை கூப்பிடா விட்டாலும் பரவாயில்லை. சட்டமன்றத்தில் உள்ள எதிர்கட்சிகளை யாவது கூட்டி ஒரு ஆலோசனை செய்திருக்கலாம். அல்லது அனைத்து கட்சிகளையும் கூட்டி ஆலோசனை செய்திருக்கலாம். அதையும் செய்யவில்லை.

**மேகதாது கட்டினால் ஒரு சொட்டு தண்ணீர் கூட கிடைக்காது!**

மேகதாதுவை பொறுத்தவரை கபினி, கே.ஆர்.சாகர் தண்ணீரை 3 அணைகள் கட்டி நிறுத்தி விட்டார்கள்.

மேகதாதுவில் அணை கட்டினால் ஒரு சொட்டு தண்ணீர் கூட தமிழகத்திற்கு வராது. ஆகவே இது ஒரு நாள், அரை நாள் பிரச்சனை அல்ல 1992ம் ஆண்டில் இருந்து இருக்கின்ற பிரச்சினை.

முன்னாள் ஆட்சியில் இருந்தவர்கள் செய்த குளறுபடியால் தான் இப்படி ஆகிவிட்டதாக அமைச்சர் ஒருவர் சொல்கிறார். நான் சட்டசபையில் இருக்கும் போது கையெடுத்து கும்பிட்டு கேட்டேன். கர்நாடகாவில் யாராவது முன்னாள் அமைச்சர்கள் சரியாக செய்யவில்லை, முன்னாள் முதல்வர்கள் சரியாக செய்யவில்லை என சொல்கிறார்களா என்றால் கிடையாது. அவர்களுடைய ஒரே நோக்கம் மேகதாது தான். அதுபோல ஆயிரம் பிரச்சனை இருந்தாலும் நீங்களா? நானா? என பேசுவதை விட காரியம் ஆக வேண்டும். அமைச்சர்கள் அடக்கி வாசிக்க வேண்டும்.

முதலமைச்சர் போய் வந்த பிறகு தான் இது பற்றி என்ன பேசினார். என்ன ஆகும் என தெரியும்.

**கேள்வி:** முதலமைச்சராக இருந்த போது எம்.ஜி.ஆர் போனது போல முதல்வர் விஜய்யும் கர்நாடக போய் பேசுகிறாரா?.

**துரைமுருகன்:** எம்.ஜி.ஆர் போனது நாம் கோர்ட்டுக்கு போகாதபோது. அப்போது நம்மிடம் நீதிமன்ற உத்தரவு இல்லை. இப்போது நம்மிடம் கோர்ட் தீர்ப்பு உள்ளது. ஆகையால் அதோடு இது பொருந்தாது.

**கேள்வி:** தற்போதைய அரசும் கடன் வாங்கி இருப்பது குறித்து?.

**துரைமுருகன்:** எந்த ஆட்சியாக இருந்தாலும் கடன் வாங்காமல் ஆட்சி நடத்த முடியாது. ஆனால் வாங்கிய கடனை என்ன செய்கிறார்கள் என்பது தான் முக்கியம்.

**கிளர்ச்சி எழுந்தால் ஆட்சி மாற்றம் நடக்கும்!**

**கேள்வி:** மத்திய அரசுக்கு எதிராக டெல்லியில் மாணவர்கள், இளைஞர்கள் நடத்திய போராட்டம் வெற்றி பெற்றது குறித்து?.

**துரைமுருகன்:** எங்கேயுமே மாணவர்கள் கிளர்ந்து எழுந்தால் ஆட்சி மாற்றம் தான் நடக்கும். வங்கதேசம் போன்ற நாடுகளிலும் அது நடந்துள்ளது. இதே போன்றுதான் 1965ல் இந்தி எதிர்ப்பு போராட்டத்தை நாங்கள் நடத்தினோம். ஒரு ஆட்சி மாற்றத்தையே ஏற்படுத்தவில்லையா?. மாணவர் சமுதாயம் என்பது லேசானது அல்ல. வெளியே இருக்கும் வரை தனியாக இருப்பான். ஆனால் ஒன்றாக சேர்ந்து விட்டால் அவனது சரித்திரம் பெரிதாகிவிடும்.

**கேள்வி:** டெல்லியில் போராடிய இளைஞர்களின் தாக்கம் 2029 நாடாளுமன்ற தேர்தலில் எதிரொலிக்குமா?.

**துரைமுருகன்:** நான் ஜோசியன் அல்ல.

**கேள்வி:** பா.ஜ.க.வுடன் தி.மு.க., நெருங்குவதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுவது குறித்து?.

**துரைமுருகன்:** பாரதிய ஜனதா கட்சியிடம் நாங்கள் நெருங்கவில்லை. காங்கிரஸ் கூட்டணியில் இருந்து நாங்கள் வெளியே வந்து விட்டோம்.

**கேள்வி:** காவிரி விவகாரம் தொடர்பாக எழுப்பப்படும் கேள்விகளுக்கு தற்போதைய நீர்வளத்துறை அமைச்சர் பதில் அளிப்பதில்லையே?.

**துரைமுருகன்:** முதல்வரே வாயை திறப்பதில்லை. பின்னர் எப்படி அமைச்சர்கள் பேசுவார்கள்.

இவ்வாறு கழக பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.




# என் தொகுதிக்குள்ள யாராவது காலை வச்சா கொன்னுடுவேன்!

## த.வெ.க. நிர்வாகிக்கு பெண் அமைச்சர் பகிரங்க மிரட்டல்!

**ராஜபாளையம், ஜூலை 29 -**

**தூக்கி ஜட்டியோட வச்சு அடிச்சு, கொன்னு வெளியே எடுத்துருவேன் என தவெக நிர்வாகிக்கு அமைச்சர் ஜெகதீஸ்வரி மிரட்டல் விடுக்கும் ஆடியோ வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் தொகுதி த.வெ.க. எம்.எல்.ஏ. மற்றும் மகளிர் மேம்பாட்டுத்துறை அமைச்சராகவும், மாவட்டப் பொறுப்பு அமைச்சராகவும் இருக்கிறார். இவர், சாத்தூர் தவெக வடக்கு ஒன்றியச் செயலாளர் ராஜகுருவிடம், ராஜபாளையம் தென்கிழக்கு ஒன்றிய செயலாளர் லட்சுமணன் குறித்து தொலைபேசியில் கடுமையான வார்த்தை களைப் பயன்படுத்தி எச்சரித்து பேசிய ஆடியோ, தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது. இந்த ஆடியோ உரையாடல் வருமாறு:

**ராஜகுரு:** அம்மா வணக்கம், சொல்லுங்கம்மா.

**அமைச்சர்:** ஒரு விஷயம் கேட்கலாம்னு கால் பண்ணேன். தாசில்தார் ஆபிஸ்ல போயி ஒரு ஆபிசர பார்த்தீங்களோ?

**ராஜகுரு:** நான் போகலம்மா. லட்சுமணன் போயிருக்காம்மா

**அமைச்சர்:** லட்சுமணனா, என்ன சொன்னாப்ல?

**ராஜகுரு:** டிஎஸ்பி ஆபிஸ் போயிருக்கான். எல்லா ஆபிஸ்க்கும் போயிருக்கான். லட்டர் கொடுத்திருக்கான்.

**அமைச்சர்:** எந்த லெட்டர் கொடுத்திருக்காராம்?

**அவர்:** இல்லம்மா... லட்டு.. லட்டு..

**அமைச்சர்:** ராஜபாளையத்துல வந்து லட்சுமணன் லட்டு கொடுக்கிறதுக்கு, தாசில்தார் ஆபீஸ் போறதுக்கு யார் அவருக்கு அதிகாரம் கொடுத்தா? தாசில்தார் இங்க வந்து எப்படி பேசுறது? சாத்தூர்காரரர் இங்க வந்து என்ன பேசுறது?

**ராஜகுரு:** அம்மா நான் யூனியன் ஆபிஸ்ல கான்ட்ராக்ட் வேலை பார்க்கிறேன். அப்போ பிடிஓ என்கிட்ட அம்மா எப்ப வர்றாங்கன்னு கேட்டார். நான் கேட்டு சொல்றேன் அப்படிங்கிறதோட முடிச்சுக்கிட்டேன். அப்ப தான் சொன்னாரு, யாரோ ஒன்றிய செயலாளர் சொல்லி லட்சுமணன் வந்தாங்க என்றார். அப்ப நான், அண்ணாச்சி யாரா இருந்தாலும், அந்தம்மா தான் தொகுதி எம்எல்ஏ, அவங்க தான் மாவட்ட செயலாளர். எதுவா இருந்தாலும், நாங்க அந்தம்மாகிட்ட சொல்லிருவோம். அந்தம்மா உங்க கிட்ட பேசுவாங்க சார். அப்படினு சொல்லி முடிச்சிருக்குமா.

**அமைச்சர்:** நீங்க லட்சுமணன் கிட்ட போன் பண்ணி சொல்லிடுங்க. நான் லட்சுமணன் மேல கம்ப்ளைண்ட் எழுதிக்கொடுத்து உள்ள வச்சுபுடுவேன்.

**ராஜகுரு:** அம்மா உங்களுக்கு தெரியும்ல.

**அமைச்சர்:** என்னைய ஆரம்பத்தில் இருந்தே சீண்டிக்கிட்டு இருக்காப்ல. ஏற்கனவே, பொதுச் செயலாளர் 5 மாதத்திற்கு முன்பே திட்டினார். திரும்ப, திரும்ப என்ன செய்றார். என்னைய பார்த்தா எப்படி தெரியுது. என் தொகுதிக்குள்ள வந்து அதிகாரம் பண்ண யார் அதிகாரம் கொடுத்தா. என் தொகுதிக்குள்ள எப்படி அந்த பையன் வருவான்.

**ராஜகுரு:** இல்லம்மா, நீங்க 15ம் தேதி வருவீங்கள்ளம்மா, பிடிஓகிட்ட எதுவா இருந்தாலும் அந்தம்மா தான்னு சொல்லிட்டோம். அவங்க உங்க கிட்ட பேசுவாங்க.

**அமைச்சர்:** நீங்க அந்த பையன் கிட்ட பேசுவீங்களா, நம்பர் வச்சுருங்கீங்களா, கொஞ்சம் கொடுத்து உதவி பண்ணுங்க, நம்பர் கொடுங்க.

**ராஜகுரு:** அம்மா நாங்க கீரியும், பாம்புமா இருக்கோம்மா.

**அமைச்சர்:** வாட்ஸ்அப்ல நம்பர் போடுங்க.

**ராஜகுரு:** உங்களுக்கு அதிகாரம் இருக்கு. கூப்பிட்டு சத்தம் போடுங்க.

**அமைச்சர்:** நான் ஒண்ணும் பண்ண மாட்டேன். நான் தூக்கி வச்சு, ஜட்டியோட வச்சு அடிச்சு கொன்னு, வெளிய எடுத்துருவேன். ரிப்போர்ட்டரா இருக்கும் போதே இவன்... என்ன பார்க்கும் போது என்ன பைத்தியக்காரன் மாதிரி இருக்கா அவனுக்கு? அண்ணாச்சி, ஒரேயொரு விஷயம் தெளிவா சொல்றேன். என் தொகுதிக்குள் சாத்தூர் தொகுதிக்காரங்க கால கூட வைக்க விடமாட்டேன். அதை மட்டும் தெளிவா சொல்லிடுங்க. உள்ள ஒருத்தனும் கால வைக்கக் கூடாது. வச்சா உடனே ஆக்ஷன் எடுப்பேன். ஏற்கனவே போலீஸ்கிட்ட சொல்லி, அங்க சுத்தி விட்டுகிட்டுதான் வச்சுருக்கேன். இருங்க ஊருக்கு வந்துக்கிறேன்.

இவ்வாறு அந்த ஆடியோ முடிகிறது.

த,வெ,க, சாத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ராஜகுருவுடன், பெண் அமைச்சர் ஜெகதீஸ்வரி பேசும் ஆடியோ வெளியானதையடுத்தே அவர் நீக்கப்பட்டு உள்ளதாகவும், ஆனால் அவர் மீது தொடர் சர்ச்சைகள் எழுந்த நிலையில், கடந்த 21ம் தேதியே கட்சியில் இருந்தே ராஜகுருவை விருதுநகர் மாவட்டச் செயலாளர் சின்னப்பர் தற்காலிகமாக நீக்கிவிட்டதாக தற்போது அறிக்கை வெளியாகி உள்ளது. இதேபோல அமைச்சர் ஜெகதீஸ்வரி மீதும் மற்றொரு பெண் அமைச்சர் கீர்த்தனாவுடன் தகராறில் ஈடுபட்டதும், தனது பெயரை பேனரில் 2வதாக போட்டதற்காக கலெக்டரிடம் மேடையிலேயே தகராறு செய்ததும், பல்வேறு வழக்குகளில் தொடர்புடைய ராக்கெட் ராஜாவுடன் படம் வந்தது என பல்வேறு புகார்கள் வெளியான நிலையில் தற்போது சொந்த கட்சி நிர்வாகிக்கே கொலை மிரட்டல் விடுத்த சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

நன்றி :
'**தினகரன்**' 28.07.2026

## லாட்டரியில் கவனம் செலுத்துபவர்களுக்கு

# மேகதாது பற்றியெல்லாம் புரியாது?

## முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி விமர்சனம்!

சென்னை, ஜூலை 29 –

லாட்டரியில் கவனம் செலுத்துபவர்களுக்கு மேகதாது வழக்கு பற்றியெல்லாம் புரியாது என்று அமைச்சர் ஆதவ் அர்ஜூனாவுக்கு முன்னாள் அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலடி கொடுத்துள்ளார்.



சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக முன்னாள் அமைச்சர் ரகுபதி நேற்று அளித்த பேட்டி வருமாறு:

தமிழ்நாட்டிற்குச் சேரவேண்டிய காவிரி நீரைப் போராடிப் பெறுவதிலும், மேகதாது அணை விவகாரத்தில் தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் தி.மு.க. எப்போதும் உறுதியாக இருந்து வந்துள்ளது. த,வெ,க, அரசின் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, நேற்றைய தினம் திமுக அரசின் சட்டப்பூர்வ நடவடிக்கைகள் குறித்து உண்மைக்கு மாறான பல கருத்துகளை தெரிவித்துள்ளார். இந்தியாவிலேயே சிறந்த சட்ட வல்லுநர்களைக் கொண்டு வழக்குகளை சிறப்பாக நடத்தி வெற்றிபெற்ற அரசு தி,மு,க, அரசு.

ஒரு அமைச்சர் இவ்வாறு பொய்யான தகவலை தெரிவிக்க கூடாது. குழந்தையே பிறக்காத போது பெயர் வைப்பதைப் போன்ற சூழல்தான் இது. ஆனால் ஆதவ் அர்ஜுனாவிற்கு இதெல்லாம் புரியாது, புரிய வாய்ப்பும் கிடையாது. ஏன் என்றால் அவர்கள் லாட்டரியில் கவனம் செலுத்துபவர்கள் இப்போது புதிதாக அரசியலுக்கு வந்திருக்கிறார்கள். மேகதாது அணையைக் கட்டுவதற்கு திமுக அரசு ஒரு சொட்டு கூட, ஒரு படி கூட, ஒரு அங்குலம் கூட அனுமதித்தது கிடையாது.

இவ்வாறு அவர் கூறினார்.

## டாஸ்மாக் அருகே பார் திறக்க அரசாணை! இளைஞர்களை 24 மணி நேரமும்

# மதுவில் குளிக்க வைக்கும் த.வெ.க. அரசின் செயலுக்கு கண்டனம்!

## முன்னாள் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு வலைதளப் பதிவு!

நெல்லை, ஜூலை 29 –

முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு தனது எக்ஸ் வலைதள பதிவில் கூறியிருப்பதாவது.



த.வெ.க.தொடங்கிய நாள் முதல் தமிழ்நாட்டில்தான் போதை பொருட்கள் பயன்பாடு அதிகரித்து விட்டதாக விஜய் அவர்கள் ஒப்பாரி வைத்துக் கொண்டே இருந்தார். தனது ஆட்சி அமைந்ததும் 717 டாஸ்மார்க் கடைகளை மூடியதாக நாடக மாடிய விஜய் இப்போது 54 புது ரக மதுபானங்கள் அறிமுகப்படுத்தி டாஸ்மார்க் கடை அருகே பார் திறக்கவும் அரசாணை வெளியிட்டு தமிழக இளைஞர்கள் 24 மணி நேரமும் மதுவில் குளிக்க வைக்கும் செயலை வன்மையாக கண்டிக்கிறேன்.

தி.மு.க.ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த "ரேவ் பார்ட்டி திறக்க அனுமதி தந்து General G என்ற whatsapp group ஆரம்பித்து இளம் ஆண்களும், பெண்களும் சேர்ந்து உயர்ரக வெளிநாட்டு போதை பொருள்களை விடிய விடிய (sunset to sanrise) பயன்படுத்த அனுமதித்திருப்பது பெற்றோர்களையும்,தமிழ் சமூகத்தையும் கலக்கத்தில் ஆழ்த்திருப்பது தெரியவில்லையா CMsir?

30க்கும் மேற்பட்ட படங்களில் குடிகாரனாகவும்,புகை பிடிப்பவ ராகவும், 34 ஆண்டுகள் நீங்கள் நடித்ததை பார்த்த ரசிகர்கள் அந்தப் பழக்கத்திற்கு அடிமையாகி விட்டார்கள் என்பது உங்களுக்கு தெரியாதா! CMsir? உங்கள் படம் வெளியான திரையரங்குகளில் சிதறி கிடந்த போதைப்பொருள் இருந்த கவர்களே அதற்கு சாட்சி.உங்களை சந்தித்த கேரள உள்துறை அமைச்சர் போதைப் பொருட்கள் கேரளாவிற்க்கு கடத்தப்படுவதை தடுத்து நிறுத்துங்கள் என்று கூறியது வெட்கமாக இல்லையா! CMsir?

காவல்துறையில் உள்ள SB CID,SB Constable,Q Branch, Special division,PEW,

Narcotics Intelligence Bureau போன்ற பிரிவினருக்கு தெரியாமல் வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து போதை பொருட்களை தமிழகத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்ய முடியாது என்றும் தமிழக சிறைகளில் தங்குதடையின்றி பயன்படுத்தவும் முடியாது என்றும்,விவரம் அறிந்த ஓய்வு பெற்ற காவல்துறை அதிகாரிகள் ஆதங்கப்படுவது தெரியுமா! CMsir? இந்த சீரழிவுகள் உங்களுக்குத் தெரிந்து தான் நடக்கிறதா அல்லது தெரிந்தும் தெரியாது போல் நாடகம் ஆட்சி நடத்துகிறீர்களா! CMsir ?

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# காஞ்சிபுரத்தில் தொடர் மின்தடையைக் கண்டித்து மக்கள் சாலை மறியல்!

காஞ்சிபுரம், ஜூலை 29 –

காஞ்சிபுரம் மாநகராட்சியில் அடங்கிய பல்வேறு வார்டு பகுதிகளில் நாள் தோறும் இரவு 7 மணி முதல் தொடர் மின்தடை பிரச்னை ஏற்பட்டு வந்தது. இந்நிலையில், காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட செவிலிமேடு அருகே இந்திரா நகர் பகுதியில் நேற்றிரவு சுமார் 2 மணி நேரத் துக்கும் மேலாக தொடர் மின்தடை ஏற்பட்டதில் அப்பகுதி மக்கள் சாப்பிடவோ, தூங்கவோ முடியாமல் பெரிதும் அவதிப்பட்டனர். அப்பகுதியில் நிலவிய மின்தடை குறித்து சம்பந்தப்பட்ட மின்வாரிய அதிகாரிகளிடம் புகார் தெரிவித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மின்தடை குறித்து மக்களுக்கு மின்வாரிய அதிகாரிகள் முறையான பதில் அளிக்கவில்லை.

இந்நிலையில், தொடர் மின்தடையால் பெரிதும் பாதிக்கப்பட்ட செவிலி மேடு பகுதியை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட மக்கள் ஒன்று கூடி, ஓரிக்கைசெவி லிமேடு சாலையில் நேற்று நள்ளிரவு திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின்போது, தொடர் மின்தடை மற்றும் மின் வாரிய அதிகாரிகளின் அலட்சியப் போக்கை கண்டித்து ஏராளமான மக்கள் சாலையில் படுத்த படி கண்டன கோஷங்கள் எழுப்பினர். இதனால் ஓரிக்கை செவிலிமேடு சாலையில் போக்குவ ரத்து பாதிக்கப்பட்டு, சுமார் ஒரு கிமீ தூரத்துக்கு ஏராளமான வாகனங்கள் அணிவகுத்து நின்றன.

மேலும், இப்போராட டத்தின் போது காஞ்சிபு ரம் மாநகராட்சி வார்டு பகுதிகளில் நிலவி வரும் தொடர் மின்தடை பிரச் னைக்கு, சம்பந்தப்பட்ட மின்வாரிய அதிகாரிகள் நேரில் வந்து, நிரந்தர தீர்வு காணும் வரை எங்களின் போராட டம் தொடரும் என்று உரக்க கோஷமிட்டனர்.